**Dated : 10.07.2025**

**O.S.No. 81/2020**

**PW.1 – Thiru. Pratiksmit Swarup**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

தமிழில் சொன்னால் அர்த்தம் புரிந்துக்கொள்வேனா என்றால் கொஞ்சம் புரிந்துக்கொள்வேன். எனக்கு இந்த லோனை பற்றிய விவரங்கள் முழுமையாக தெரியுமா என்றால் தெரியும். ஆவணங்களின் அடிப்படையில் எனக்கு இந்த வழக்கு விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் எல்லாம் சரிதானே என்றால் சரிதான். நான் இந்த ஆவணங்களில் கையொப்பமிட்டிருக்கிறேன், எங்கு வைத்து கையொப்பமிட்டேன் என்றால் எனது வங்கியில் வைத்து கையொப்பமிட்டேன். நாங்கள் லோன் கொடுப்பதாக இருந்தால், அனைத்து ஆவணங்களிலும் கையொப்பம் பெற்றுக்கொண்டுவிடுவோம் என்றால் சரியல்ல. 24.11.2011 தேதியில் கடனாக ரூ.5,00,000/– பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக லோன் கேட்டு யார் மனு கொடுத்தார்கள் என்றால் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் இருவருமே லோன் கேட்டு வந்தார்கள். அவர்கள் இருவரையும் நான் நேரிட்டு பார்த்தேனா என்றால் ஆவணத்தின் மூலம் தான் தெரியும்.

விவசாய லோன் கேட்டு அவர்கள் விண்ணப்பித்தார்கள் என்பதை காட்டுவதற்கு அந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. லோன் வழங்கியது நான் இல்லை என்றால் சரிதான். கடன் பெறுபவரிடமிருந்து நாங்கள் MOD வாங்கி அதனை பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். 28.10.2011 தேதியில் அதுபோன்ற MOD பிரதிவாதியால் கொடுக்கப்பட்டு, அந்த MOD திருப்பப்பட்டுவிட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் லோன் கொடுத்ததற்காக வழங்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். Ex.A7–ல் கடன் தொகை குறிப்பிட்டு காட்டப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். 24.11.2011 தேதியில் DD மூலமாக JCB–க்காக ரூ.1,00,000/– பணத்தினை நேரடியாக அந்த நிறுவனத்திற்கே கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த நிறுவனத்திற்கே கொடுத்துவிட்டோம். 30.11.2011 தேதியில் JCB யாரிடமிருந்து வழங்குகிறாரோ அவர் பெயருக்கு காசோலை கொடுக்கப்பட்டது. ஈரோட்டில் வசிக்கும் அருண்குமாரை இந்த வழக்கின் பிரதிவாதிக்கு தெரியாது என்று சொன்னால் பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க DD நேரடியாக அருண்குமாருக்கு வழங்கப்பட்டது.

பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் DD–ஐ அருண்குமார், DDR வெங்கடேஷ்வரா யர்த் மூவர்ஸ்க்கும் DD வழங்கினோம் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்கிறோம். மேற்படி கடன் கொடுத்த விவரங்களை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் பிரதிவாதிகளிடமிருந்து வெறும் கையொப்பம் பெற்றுக்கொண்டு, மற்ற விவரங்களை நாங்களாகவே பூர்த்தி செய்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் கொடுத்த லோன் விவசாயத்திற்கான லோன் என்றால் சரிதான். பிரதிவாதிகளிடமிருந்து வாங்கியிருக்கும் ஆவணம் வீட்டுமனை பத்திரம் என்றால் சரிதான். லோனை ஜெயலட்சுமிக்கு மட்டும் தான் அனுப்பப்பட்டுள்ளது, அசோகன் பெயர் அதில் காட்டப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஜெயலட்சுமிக்கு இந்த லோன் சம்மந்தமாக எந்த விவரமும் தெரியாது, 2ம் பிரதிவாதியிடம் ரூ.2,50,000/– தான் பணம் கொடுத்தோம் என்றால் அது தவறு. முதலில் எங்கள் வங்கி மூலமாக பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்ட தொகையானது 25.11.2011ல் ரூ.50,000/–மும், 19.12.2011ல் ரூ.40,000/–மும், 10.01.2012ல் ரூ.70,000/–மும், 20.02.2012ல் ரூ.20,000/–மும், 04.05.2012ல் ரூ. 20,000/–மும், 23.07.2012ல் ரூ.20,000/–மும், 10.09.2012ல் ரூ.20,000/–மும், 21.11.2012ல் ரூ.20,000/–மும் ஆக மொத்தம் ரூ.2,60,000/– தான் வங்கியிலிருந்து பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் மொத்தமாக ரூ.5,00,000/– பிரதிவாதிகள் கையில் கொடுக்கப்பட்டது.

பிரதிவாதிகளுடைய கோரிக்கையை ஏற்று, அவர் சொன்ன நபர்களுக்கு ஆகக்கூடுதலாக ரூ.2,40,000/– DD மூலமாக அனுப்பப்பட்டுள்ளது. பிரதிவாதிகளுக்கு எங்களால் DD மூலமாக தொகை செலுத்தப்பட்ட நபர்கள் யார் என்றே தெரியாது என்றால் அது தவறு. எங்களால் அனுப்பப்பட்ட JCB–ஐ 15 நிமிடம் கூட பயன்படுத்தவில்லை, அது ரிப்பேர் ஆகிவிட்ட காரணத்தினால் அதை திருப்பி எடுத்து சென்றுவிட்டார்கள், மேற்சொன்ன விவரம் நடந்த காரணத்தினால் 2ம் பிரதிவாதி வங்கிக்கு புகார் ஒன்றை கொடுத்தார் என்று சொன்னால் அது தவறு. 2வது DD கொடுத்தவர்களும், தென்னங்கன்றுகளை கொடுக்காமல் ஏமாற்றிவிட்டார்கள் என்றால் சரியல்ல. சாட்சி தாமே கூறுகிறார், இதுபோல தென்னங்கன்றுகளை கொடுக்காமல் ஏமாற்றிவிட்டார்கள் என்பது பற்றி எங்களிடம் எந்த புகாரும் கொடுக்கவில்லை. லோனை பற்றி எந்த விவரமும் எனக்கு தெரியாது, அவ்வாறு தெரிந்திருந்தால் பிரதிவாதிகள் குறைகள் சொல்லி தாக்கல் செய்த ஆவணங்களே நான் தாக்கல் செய்யமாட்டேன் என்றால் சரியல்ல.

எனக்கு முன்னாள் பணிபுரிந்த அதிகாரி செய்த தவறினை மறைப்பதற்காக வேண்டி நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வங்கியிலிருந்து பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்ட தொகையை மீண்டும் செலுத்திட தயாராக இருக்கிறார்கள் என்றால் அது ஏற்க இயலாது. எனது வங்கி ஊழியர்கள் செய்த தவறான செயலுக்காக, அவர்களை காப்பாற்ற வேண்டி பிரதிவாதிகளிடமிருந்து முழு தொகையும் செலுத்த நிர்பந்திக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் ரூ.2,60,000/- மட்டுமே கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R

Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.